மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது விவசாயிகளுக்கு மின் இணைப்பு இரவில்தான் கொடுக்கப்படுகிறது. பகலிலே கொடுப்பதில்லை. அதனால் இரவு வயலுக்குப் போகும்போது பாம்பு கடித்து இறந்துவிடுகிறார்கள். இரவில் வெட்டு, குத்தெல்லாம் நடக்கிறது......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

குமரி மாவட்டம் அஞ்சு கிராமத்தில் மின் நிலையம் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 969 திரு. க. முத்துக்கிருஷ்ணன் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம் அஞ்சு கிராமத்தில் 33 KV மின் நிலையம் (Transfoмer) அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) மற்றும் (ஆ) 110/11 கே. வி. மின் நிலையம் ஒன்று ரூபாய் 47 இலட்சம் செலவில் அஞ்சு கிராமத்தில் அமைப்பதற்காக ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

ஜோலார்பேட்டைக்கு அருகே சிட்கோ மூலம் புதிய தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம்.

*வினா எண் 970—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் ஜோலார்பேட்டைக்கு அருகே சிட்கோ மூலம் ஒரு புதிய தொழிற்பேட்டை ஆரம்பிக்க செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும் ?